*கவனிக்க.- 2016.07.29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1979 - 2016 අගෝස්තු මස 05 වැනි සිකුරාදා - 2016.08.05**

*1979 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 822 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 823 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 825 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 828 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும்) நிர்வகித்தலும் பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டமூலம் 2016, மே மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, ஓகத்து மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஓகத்து மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2016 இன் இல. 786

எம்ஓடி /டிஈஎவ்/03/02/பீஆர்ஓ/ஆர்என்எப்/01/08.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட பதவி உறுதிப்படுத்துதல்

*2016, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கமாண்டர் (இ) தரத்திற்கு :*

லெப்டினன்ட் (இ) [தற்காலிக லெப்டினன்ட் கமாண்டர் (இ)] நாராயன முதலிகே சாமர ஜனக பெரேரா, என்ஆர்ஈ, 2310, இகப

*2016, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கமாண்டர் தரத்திற்கு :*

லெப்டினன்ட் (தற்காலிக லெப்டினன்ட் கமாண்டர்) தஸநாயககே துமிந்த குமார தயானந்த, என்ஆர்எக்ஸ் 1884, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2016, மே 30.

8-133/1

---

2016 இன் இல. 787

எம்ஓடி /டிஈஎவ்/03/02/பீஆர்ஓ/ஆர்என்எப்/01/08.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட பதவி உறுதிப்படுத்துதல்

*2016, மே மாதம் 01 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கமாண்டர் தரத்திற்கு :*

லெப்டினன்ட் [தற்காலிக லெப்டினன்ட் கமாண்டர்] விமலசுரேந்திர முஹம்திரம் அசங்க சாமல் குமார முஹம்திரம், என்ஆர்எக்ஸ் 1876, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2016, மே 30.

8-133/2

2016 இன் இல. 788

எம்ஓடி /டிஈஎவ்/03/02/பீஆர்ஓ/ஆர்என்எப்/01/08.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு

*2015, யூன் மாதம் 20 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கமாண்டர் (ச) தரத்திற்கு :*

லெப்டினன்ட் (ச) மொஹமட் சான் நல்லவங்ச, என்ஆர்எஸ். 2265, இகப

*2016, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கமாண்டர் (நாசெ) தரத்திற்கு :*

லெப்டினன்ட் (நாசெ) றய்கம் பண்டாரநாயக முதலிகே சக்விதி றய்கம் பண்டார, என்ஆர்பீ 2377, இகப

லெப்டினன்ட் (நாசெ) ஹேரத் முதியன்சேலாகே துசான் சாலிந்த ஹேரத், என்ஆர்பீ 2379, இகப

*2016, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கமாண்டர் (இ) தரத்திற்கு :*

லெப்டினன்ட் (இ) லிலான் ரத்நாயக, என்ஆர்ஈ 2391, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2016, யூன் 08.

8-133/5

---

2016 இன் இல. 789

எம்ஓடி /டிஈஎவ்/03/02/பீஆர்ஓ/ஆர்என்எப்/01/08.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு

*2016, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கமாண்டர் தரத்திற்கு :*

லெப்டினன்ட் ஹெவா பொடிகே உதயங்க மங்கல குமார ஹெவாசிங்க, என்ஆர்எக்ஸ். 2359, இகப

2016, மே மாதம் 01 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கமாண்டர் தரத்திற்கு :

லெப்டினன்ட் கருணாமுனி சங்க மதுசான் சில்வா, என்ஆர்எக்ஸ் 2358, இகப

லெப்டினன்ட் டனங்சூரிய ஆரச்சிலாகே நிசான்த டனங்சூரிய, என்ஆர்எக்ஸ் 2364, இகப

லெப்டினன்ட் சுபுன் லக்மால் விக்ரமசிங்க, என்ஆர்எக்ஸ் 2373, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2016, மே 30.

8-133/4

2016 இன் இல. 790

எம்ஓடி /டிஈஎவ்/03/02/பீஆர்ஓ/ஆர்என்எப்/01/08.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு

2016, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கமாண்டர் (இ) தரத்திற்கு :

லெப்டினன்ட் (இ) திலின மதுசங்க ஜயசிங்ஹ, என்ஆர்ஈ 2388, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2016, மே 30.

8-133/3

## மற்றைய நியமனங்களும் பிறவும்

2016 இன் இல. 791

### பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

இலங்கை நிர்வாக சேவையின் நியமனங்கள்

1. இலங்கை நிர்வாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த திருமதி சிங்ஹார திமுது லதாங்கி சில்வா அவர்கள் 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் உதவிப் பணிப்பாளர் (மூலோபாய மற்றும் விசாரணை) ஆக.

2. இலங்கை நிர்வாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த திரு. பனாவல விதானலாகே ஷமில் சிந்தன பனாவல அவர்கள், 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை அரசாங்க தகவல்கள் திணைக்களத்தின் உதவித் தவல் பணிப்பாளராக.

3. இலங்கை நிர்வாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த திருமதி எம். கே. ஜீ. மொரவக அவர்கள், 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் (நிர்வாக) ஆக,

4. இலங்கை நிர்வாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த செல்வி ஜே. ராஜமல்லிகை அவர்கள் 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை பிரதம அமைச்சர் அலுவலகத்தில் உதவிச் செயலாளராக.

5. இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. வங்சதிலக ஆரச்சிகே ரோஹண ஹேமகுமார வங்சதிலக அவர்கள் 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) ஆக.

6. இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. எஸ். என். பீ.கே. எஸ். சேனாரத்ன அவர்கள் 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) ஆக,

7. இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திருமதி டீ. என். சமரவிக்ரம அவர்கள் 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் பரிசோதனை அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாக மற்றும் நிதி) ஆக,

8. இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந் திருமதி டப். பீ.சந்தநாயக அவர்கள் 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) ஆக,

9. இலங்கை நிர்வாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த திருமதி டி. வீ. தணசிங்கம் அவர்கள் 2015 ஆம் ஆண்டு நவெம்பர்

மாதம் 24 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தின் உரிமை நிர்ணய உதவி ஆணையாளராக,

10. இலங்கை நிர்வாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த செல்வி எஸ். என். மாயாதுன்ன அவர்கள் 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தின் உதவி ஆணையாளராக,

11. இலங்கை நிர்வாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த திருமதி எல். எஸ். எச். ஹேவகே அவர்கள், 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் பரிசோதனை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்) ஆக,

12. இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. யூ. எச். சீ. பிரியந்த அவர்கள் 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஆக,

13. இலங்கை நிர்வாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த திரு. ஏ. எச். எம். எல். அபேரத்ன அவர்கள் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்) ஆக,

14. இலங்கை நிர்வாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த திரு. டீ. டி. எப். சுரவீர அவர்கள் 2016 ஆம் ஆண்டு ஏப்பில் மாதம் 20 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளராக.

15. இலங்கை நிர்வாக சேவையின் தரம் II ஐச் சேர்ந்த திரு. வை. பரம்தாமன் அவர்கள் 2016 ஆம் ஆண்டு ஏப்பில் மாதம் 18 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பிரதி ஆணையாளராக.

16. இலங்கை நிர்வாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த திரு. டப். ஏ. ஆர். விக்ரமசிங்க அவர்கள் 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளராக.

17. இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. எஸ். எம். எல். சந்தரசிறி அவர்கள் 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் மேலதிக பணிபாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி) ஆக,

18 இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. பீ. எல். ஏ. ஜே. தர்மகீர்த்தி அவர்கள் 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை பெருந்தோட்டக் கைத்தொழல் அமைச்சின்மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) ஆக,

19 இலங்கை நிர்வாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த திருமதி எஸ். ஆர்.எஸ். த சில்வா அவர்கள் 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை பிரதமர் அலுவலகத்தில் உதவிச் செயலாளராக,

20 இலங்கை நிர்வாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த திருமதி டி.டீ.குமாரதாச அவர்கள் 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை பாராளுமன்றத்தின் அரச கட்சியின் பிரதான ஒருங்கமைப்பு அலுவலகத்தின் உதவிச் செயலாளராக.

ஜே. தடல்லகே,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவம் அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவம் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2016, யூலை 14.

8 - 35

---

2016 இன் இல. 792

**இலங்கை வான்படை**

வான்படை தளபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வுகள்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களது பெயர்களின் முன்னே குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து பிளைட் லெப்டினன்ட் பதவிக்கு பதவியுயர்த்தப்படுகிறாகள் :-

பிளைங் ஒபிசர் வெவலகே தரிந்து உமேஷ் பெர்னாண்டோ, (03208) வழங்கல் 2016.06.03

பிளைங் ஒபிசர் ரவிந்து ரணமல் பண்டார ஜெயசிங்க, (03131) வழங்கல் 2016.06.13

பிளைங் ஒபிசர் சஞ்ஜீவ பிரசாத் கூரகொடகே (03133) வழங்கல் 2016.06.13

பிளைங் ஒபிசர் சதருவன் ஹேவபதிரன (03100) நிர்/ரெஜி 2016.07.03

பிளைங் ஒபிசர் கயசான் பண்டார ரத்னாயக (03108) நிர்வாகம் 2016.07.03

பிளைங் ஒபிசர் புத்திக சுகத் நலகமகே (03109) நிர்வாகம் 2016.07.03

ஜி. பி. புலத்சிங்கள,
எயார் மார்ஷல்,
வான்படைத் தளபதி.

கொழும்பு,
2016, ஒகத்து 05.

8-57

# அரசாங்க அறிவித்தல்கள்

## காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 120) கீழான அறிவித்தல்

கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவது கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2016.08.05 ஆந் திகதி தொடக்கம் 2016.08.19 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு அநுராதபுரம் காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்துமூலம் 2016.08.19 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

### அட்டவணை

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகளின் விபரங்கள் | காணி பற்றிய விபரங்கள் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள் |
| அநுராதபுரம் மாவட்டத்தின் அநுராதபுரம் காணிப்பதிவகத்தின் LDO 422 புத்தகத்தின் 01 ஏடு. | அநுராதபுரம் மாவட்டத்தின் ராஜாங்கனய பிரதேசத்தின் வருமான அதிகாரப் பிரிவின் எப்பாவல கோறளையில் இலக்கம் 449 கிராம அலுவலர் பிரிவின் யாய 6 என்னும் கிராமத்தில் அமைந்துள்ள வரண்ட காணிக்கான எல்லைகள் :-<br>வடக்கு : தனுஷ்க குமாரவின் அனுமதியற்ற காணி;<br>கிழக்கு : நிமல் கருணாதிலக்கவின் காணி ;<br>தெற்கு : பியரத்னவின் காணி;<br>மேற்கு : ஆரியரத்ன கைப்பற்றிய காணி.<br><br>விஸ்தீரணம் : 0ஏ. 2றூ. 0பே. | 1. சனாதிபதி செயலாளரினால் 1997.04.28 ஆந் திகதி அளிக்கப்பட்ட இலக்கம் அநு/அரச/பி/3925 உடைய அரச அளிப்புப் பத்திரம். |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/53/2016/ஏடு. தயா.
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

8-83

## காணி அமைச்சு

நில அளவைச் சபை

*2002 ஆம் ஆண்டிற்கான 17 ஆம் இலக்க, நில அளவைச் சட்டத்தின் 47 (1) (ஆ) இன் கீழ் பதிவுஇடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நில அளவையாளர்களின் பெயர்ப்பட்டியல்*

| பதிவு இல. | முழுப் பெயர் | பதிவு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள காலப் பகுதி | இலங்கை நில அளவைச் சபையினால் குறைபாடுடையதாக உறுதி செய்யப்பட்ட நில அளவையாளர்களின் கிடைப்படம்/ கிடைப்படங்கள் |
|---|---|---|---|
| 1. 19920413 | ரணதுங்க ஜயசேகர கோரலாகே அமரநாத் மஹேந்திர ரணதுங்க ஜயசேகர | 2016.06.01 முதல் 2019.05.31 வரை | 2003.07.25 ஆந் திகதிய 3518 கிடைப்படம், 2003.11.18 ஆந் திகதிய 3696 கிடைப்படம், 2007.04.21 ஆந் திகதிய உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. ஏ. விஜேசூரிய அவர்களின் 2973 கிடைப்படம் 2000.11.12 ஆந் திகதிய 2112 கிடைப்படம், 1999.04.24 ஆந் திகதிய 11385 கிடைப்படம், உத்தரவுப்பெற்ற நிலஅளவையாளர் எல். டபிள்யூ. எல். டி சில்வா அவர்களின் 14397 கிடைப்படம் (1998.03.14) ஆந் திகதி ஆர். ஜே. கே. ஏ. எம். ஆர். ஜயசேகர அவர்களினால் சான்றுப்படுத் தப்பட்டுள்ளது.) |

பி. எம். பி. உதயகாந்த,
தலைவர்,
நில அளவைச் சபை .

கொழும்பு,
2016, யூலை 30.

8 -86

---

## காணி அமைச்சு

நில அளவைச் சபை

*2002 ஆம் ஆண்டிற்கான 17 ஆம் இலக்க, நில அளவைச் சட்டத்தின் 47 (1) (ஆ) இன் கீழ் பதிவுஇடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நில அளவையாளர்களின் பெயர்ப்பட்டியல்*

| பதிவுஇல. | முழுப் பெயர் | பதிவு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள காலப் பகுதி | இலங்கை நில அளவைச் சபையினால் குறைபாடுடையதாக உறுதி செய்யப்பட்ட நில அளவையாளர்களின் கிடைப்படம்/ கிடைப்படங்கள் |
|---|---|---|---|
| 1. 19790048 | ராமநாயக்க கங்கானம்லாகே பேமசிங்க ராமநாயக்க | 2016.06.01 முதல் 2017.05.31 வரை | 2011.02.07 ஆந் திகதிய 4952 கிடைப்படம் |

| பதிவுஇல. | முழுப் பெயர் | பதிவு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள காலப் பகுதி | இலங்கை நில அளவைச் சபையினால் குறைபாடுடையதாக உறுதி செய்யப்பட்ட நில அளவையாளர்களின் கிடைப்படம்/ கிடைப்படங்கள் |
|---|---|---|---|
| 2. 1976694 | அளுத்வலவ்வே ஜோர்ஜ் வேரகம கிராகம | 2016.07.01 முதல் 2017.06.30 வரை | 1995.07.14 ஆந் திகதிய 2019/1-2 கிடைப்படம்,<br>1995.07.14 ஆந் திகதிய 3019/1-2B கிடைப்படம்,<br>2000.12.04 ஆந் திகதிய 3019/1 கிடைப்படம்,<br>2001.05.30 ஆந் திகதிய 3019/3A கிடைப்படம்,<br>2001.05.30 ஆந் திகதிய 3019/3B கிடைப்படம். |

பி. எம். பி. உதயகாந்த,
தலைவர்,
நில அளவைச் சபை .

கொழும்பு,
2016, யூன் 16.

8 -87

---

## அஞ்சல் திணைக்களம்

அஞ்சல் அலுவலகச் சட்டத்தின் 45 ஆவது பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

**2013.01.01 ஆந் திகதி தொடக்கம் 2013.12.31 ஆந் திகதி வரை விநியோகிக்கப்பட்ட காசுக் கட்டளைகள்**

காசுக்கட்டளை ஒன்று அதன் விநியோக மாதத்தின் இறுதித் தினத்திலிருந்து ஆறு மாதத்திற்குச் செல்லுபடியாகும் சில தவிர்க்க முடியாத காரணங்களினால் காலங்கடந்த காசுக் கட்டளைகள் அதன் விநியோக மாதத்தின் இறுதித் தினத்திலிருந்து இரண்டு வருடங்களுக்குள் அதனை மாற்றிக் கொடுக்க முடியும். இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட காசுக் கட்டளைகள் எக்காரணத்திற்காகவும் மாற்றிக்கொடுப்பதற்கோ கால நீடிப்புச் செய்வதற்கோ முடியாது. இது போன்ற காசுக் கட்டளைகளின் பெறுமதி அரசாங்கத்தின் வரவு கணக்கிற்கு மாற்றப்படும்.

2. ஆனால் பின்வரும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் இரண்டு வருடங்களிற்குள் மாற்றப்படாத காசுக் கட்டளைகள் அரசாங்க வரவுக் கணக்கிலிருந்து அதற்குரிய தண்டப் பணத்தைக் கொடுத்து மீளப்பெற்று மாற்றிக் கொடுக்க முடியும் :-

(i) நீதிமன்றத்தில் சமர்ப்பித்த காசுக்கட்டளைகள்;

(ii) சட்ட நிமித்தம் காரணமாக வீட்டு வாடகை கட்டளை சபையினால் தடுத்து வைக்கப்பட்ட காசுக்கட்டளைகள் ;

(iii) பணத்தைப் பெறுபவர் வெளிநாடு சென்றிருந்தால் (கடவுச்சீட்டு சமர்ப்பித்தல் வேண்டும்);

(iv) பணத்தைப் பெறுபவர் மோசமாக உடல் நிலை பாதிக்கப் பட்டிருந்தால் (அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் உறுதிப் படுத்தக்கூடிய வைத்தியச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.).

3. மேற்படி 2 (i) (ii) இல் கூறப்பட்ட காசுக்கட்டளைகளை இது சம்பந்தமான வர்த்தமானி பத்திரிகை பிரசுரிக்கும் தினத்திலிருந்து 3 மாத காலத்திற்குள்ளோ அல்லது அதற்கு முன்னரோ காசுக்கட்டளை சம்பந்தமான விபரங்களடங்கிய வழக்கு இலக்கத்துடன் 2 (i) (ii) இன் கீழ் காசுக்கட்டளை சமர்ப்பிப்பதற்கு அசௌகரியமாக இருந்தால் அதற்கான ஆவணங்களை காசுக்கட்டளைச் சேவை கட்டுப்பாட்டாள ருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

4. அவ்வாறு தற்பொழுது நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குக்காகவும் வேறு சட்ட நோக்கங்களுக்காகவும் நீதிமன்ற கட்டளை மூலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளைகள் வீட்டு வாடகை கட்டுப்பாட்டாளர் சபை வழக்கு சம்பந்தமாக தடுத்து வைக்க வேண்டிய காசுக்கட்டளைகள் திணைக்களங்கள் மற்றும் அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று விசாரணைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் காசுக்கட்டளைகள் இதற்குள்ளடங்காது.

5. இதன்படி மீதியாக உள்ள காசுக்கட்டளைகளை விரைவாக முடிவுறுத்துவதற்காக 2013.01.01 ஆந் திகதி தொடக்கம் 2013.12.31 ஆந் திகதி வரை வழங்கப்பட்டுள்ள காசுக்கட்டளைகளுக்கு இது சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல் பிரசுரித்த தினத்திலிருந்து மூன்று மாதங்கள் வரையுமே மீளளிப்புச் செய்ய முடியும். இது சாதாரண காசுக்கட்டளைகள், மற்றும் பெறுமதி செலுத்தப்பட வேண்டிய காசுக்கட்டளைகள், தந்திக் காசுக்கட்டளைகள், பெக்ஸ் காசுக்கட்டளைகள் சகலவற்றிற்கும் பொருந்தும்.

அவ்வாறு மேற்படி 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டதன் கீழ், காசுக் கட்டளைகளின் பெறுமதி அரசாங்க வருமானத்துக்கு வரவு வைக்கப்பட்டிருந்தால்அந்தக் காசுக்கட்டளைகளின் பெறுமதி நிதிப் பிரமாணங்களுக்கு அமைய வருமானத்தில் மீளச் செலுத்துவதாக கவனத்தில் கொண்டு உரியவர்களுக்கு மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6. ஆகவே மேற்படி 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு காசுக்கட்டளைகளுக்கான பணத்தை மீளளிப்பதற்கு கவனத்தைச் செலுத்தும் பொருட்டு எழுத்துமூலம் மேற்கொள்ளப்படும் வேண்டு கோள் மற்றும் உரிய காசுக்கட்டளையுடன் காசுக்கட்டளைச் சேவைக் கட்டுப்பாட்டாளருக்கு கீழ்க் காணப்படும் முகவரிக்கு இந்த வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 03 மாதத்துக்கு உள்ளோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்புமாறு மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், வாடகை கட்டுப்பாட்டாளர் சபை, அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள், அரச நிறுவனங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்:-

காசுக்கட்டளைச் சேவை கட்டுப்பாட்டாளர்
அஞ்சல் கட்டடத்தொகுதி,
அஞ்சல் திணைக்களம்,
கண்டி.

7. மேலும் 2013.01.01 ஆந் திகதி தொடக்கம் 2013.12.31 ஆந் திகதி வரை வழங்கப்பட்டு, காலம் முடிந்த காசு கட்டளைகளுக்காக பணம் மீளச் செலுத்துமாறு பின்னர் விடுக்கப்படும் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எக்காரணம் கொண்டும் அவ்வாறான காசுக்கட்டளைகளுக்கான பணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்றும் இத்தால் அறியத் தருகின்றேன்.

8. 2013.01.01 ஆந் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள எந்த ஒரு காசுக்கட்டளைக்கும் எக்காரணம் கொண்டும் விடுக்கப்படும் வேண்டுகோளுக்காக பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

எம். எச். அப்துல் ஹலீம்,
அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும்
முஸ்லிம் சமய விவகாரங்கள்
அமைச்சர்.

8-152

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(இரத்தினபுரி கிளை)
வாடிக்கையாளரின் பெயர்: ஸ்ரீ மாயா ரிரேடிங் (பீவீரீ) லிமிட்டெட்

2016.06.29 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் பணிப்பாளர் சபை கூட்டத்தில் பின் வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது:-

''கடப்பாடுடையவரான ஸ்ரீ மாயா ரிரேடிங் (பீவீரீ) லிமிட்டெட் மற்றும் ஈடுவைத்தவரான கட்டவலகே அஜித் பிரேமகீர்த்தி டீ விஜேசிங்ஹ ஆகியோர், பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபன எம் ப.வ.க. இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு சீ. தயாரத்ன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2015, செத்தெம்பர் 25 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 10121 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ளார்க ளாதலாலும்:

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. (இதனத்துப்பின்னர் சிலவேளைகளில் ''வங்கி'' என அழைக்கப்படும்) இற்கு சொல்லப்பட்ட ஈட்டு முறி இல. 10121 இன் மூலம் 01.05.2016 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதிவரை எண்பத்தேழு இலட்சத்து இரண்டாயிரத்து நாற்பத்து மூன்று ரூபா மூன்று சதம் (ரூ. 87,02,043.03) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு பதின்மூன்று தசம் ஐந்து வீத (13.5%) வட்டியுடன் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது எண்பத்தேழு இலட்சத்து இரண்டாயிரத்து நாற்பத்து மூன்று ரூபா மூன்று தசம் (ரூ. 87,02,043.03) கொண்ட தொகை மற்றும் 11.05.2016 ஆந் திகதிவரையான வட்டியும் 12.05.2016 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதிவரை இருபத்தேழு இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்து அறுநூற்று இருபத்தெட்டு ரூபா எண்பத் தொன்பது சதம் (ரூ. 27,35,628.89) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு இருபத்து நான்கு வீத (24%) வட்டியுடன் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது இருபத்தொன்பது இலட்சத்து பதினெண்ணாயிரத்து நூற்று ஐம்பத்து நான்கு ரூபா எண்பத்து நான்கு சதம் (ரூ. 29,18,154.84) கொண்ட தொகை மற்றும் 11.05.2016 ஆந் திகதி வரையான வட்டியும் 12.05.2016 ஆந்

திகதியிலிருந்து கொடுப்பனவு திகதிவரை பதினாறு இலட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து அறுநூற்று ஐம்பது ரூபா (ரூ. 16,45,650.00) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு பதினைந்து தசம் ஐந்து வீத (15.5%) வட்டியுடன் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது பதினாறு இலட்சத்து தொண்ணூற்றையாயிரத்து முந்நூற்று பதினொரு ரூபா எழுபத்தைந்து சதம் (ரூபா 16,95,311.75) கொண்ட தொகை மற்றும் 11.05.2016 ஆந் திகதிவரையான வட்டியும் 12.05.2016 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதிவரை பதினாறு இலட்சத்து நான்காயிரத்து தொளாயிரத்து நாற்பது ரூபா (ரூ. 16,04,940.00) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு பதினைந்து தசம் ஐந்து வீத (15.5%) வட்டியுடன் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது பதினாறு இலட்சத்து ஐம்பத்து மூவாயிரம் ரூபா நாற்பத்தொன்பது சதம் (ரூ. 16,53,000.49) கொண்ட தொகை மற்றும் 11.05.2016 ஆந் திகதிவரையான வட்டியும் 12.05.2016 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதிவரை இருபத்தைந்து இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து நாநூற்று தொண்ணூறு ரூபா (ரூ. 25,93,490.00) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு பதினைந்து தசம் ஐந்து வீத (15.5%) வட்டியுடன் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது இருபத்தாறு இலட்சத்து எழுபத்தோராயிரத்து நூற்று ஐம்பத்திரண்டு ரூபா தொண்ணூற்றேழு சதம் (ரூ. 26,71,152.97) கொண்ட தொகை மற்றும் 11.05.2016 ஆந் திகதிவரையான வட்டியும் 12.05.2016 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதிவரை இருபது இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து நாநூறு ரூபா (ரூ. 20,93,400.00) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு பதினைந்து தசம் ஐந்து வீத (15.5%) வட்டியுடன் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது இருபத்தொரு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து இருநூற்று இரண்டு ரூபா (ரூ. 21,56,202.00) கொண்ட தொகை மற்றும் 11.05.2016 ஆந் திகதிவரையான வட்டியும் 12.05.2016 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதிவரை இருபது இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து நாநூறு ரூபா (ரூ. 20,93,400.00) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு பதினைந்து தசம் ஐந்து வீத (15.5%) வட்டியுடன் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது இருபத்தொரு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து இருநூற்று இரண்டு ரூபா (ரூ. 21,56,202.00) கொண்ட தொகை மற்றும் 11.05.2016 ஆந் திகததி வரை வட்டியும் 12.05.2016 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதிவரை இருபத்தொரு இலட்சத்து பதினெட்டாயிரத்து இருநூற்று நாற்பது ரூபா (ரூ. 21,18,240.00) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு பதினைந்து தசம் ஐந்து வீத (15.5%) வட்டியுடன் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது இருபத்தொரு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து எழுநூற்று மூன்று ரூபா அறுபத்தெட்டு சதம் (ரூ. 21,79,703.68) கொண்ட தொகை மற்றும் 2016.05.11 ஆந் திகதிவரையான வட்டியும் அத்துடன் 2016.05.12 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை இருபத்தொரு இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து எண்ணூற்று நாற்பத்தெட்டு ரூபா பதின்மூன்று (ரூ. 21,25,848.13) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு பதினைந்து தசம் ஐந்து வீத (15.5%) வட்டியுடன் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது இருபத்தொரு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று இருபத்து மூன்று ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 21,89,623.57) கொண்ட தொகை மற்றும் 11.05.2016 ஆந் திகதிவரையான வட்டியும் தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும்:

வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை இரண்டு கோடி அறுபத்து மூன்று இலட்சத்து இருபத்தோராயிரத்து முந்நூற்று தொண்ணூற்று நான்கு ரூபா முப்பத்து மூன்று சதம் (ரூ. 2,63,21,394.33) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதிகளிலிருந்து விற்பனை திகதி வரை வட்டியுடனும் சேர்த்து அறவிடுதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள முதன்மை ஈட்டு முறி இல. 10121 இன் மூலம் ஸ்ரீ மாயா ரிரேடிங் (பீவீரீ) லிமிட்டெட்டினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், கொலன்னாவை, விஹார மாவத்தை, இல.182/3 (50/3) ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் துசித்த கருணாரத்ன அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவிற்குள், அளுத்குரு கோறளை, தாசிய பற்று, கட்டான பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கட்டுநாயக்கவில்-சீதுவை நகர சபை எல்லைகளுக்குள், 143ஏ-கட்டு நாயக்க தெற்கு கிராம அலுவலர் பிரிவு, கட்டுநாயக்கவில் அமைந்துள்ளதும் "தவட்டகஹவத்தை கொட்டஸ மற்றும் தவட்டகஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. டீ. என். பீரிஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1995.06.25, 2012.03.02 மற்றும் 2015.07.18 ஆந் திகதிகளில் நிலஅளவை செய்யப்பட்ட வரைபடம் இல. 726ஏஏ இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஏ என அடையாளமிடப்பட்டுள்ள பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு ஏ இன் எல்லைகளாவன - வடக்கு: சரத் மாவத்தை மற்றும் எச். டி. பிரான்சிஸ் அப்புகாமியின் காணி: கிழக்கு: டபிள்யு.எம்.ஆர். வின்சன்ட் மற்றும் ஜியோர்ஜிஅனா ரொட்ரிகோவின் காணி: தெற்கு: எச். டி. மெட்ரில்டா மற்றும் டி. சேனாநாயக்கவின் காணிகள்: மேற்கு: சரத் மாவத்தை. இது, 0.1207 ஹெக்டயார் அல்லது ஒரு றூட் ஏழு தசம் ஏழு ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 1றூ. 7.75பே.) விஸ்தீரணமுடையது. நீர்கொழும்பு காணி பதிவகத்தில் தொகுதி/ பக்கம் எச் 268/100 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள துண்டு, கீழே விவரிக்கப்பட்டுள்ள காணிகளின் ஒரு ஒன்றிணைப்பு ஆகும்:

1. மேற்கூறப்பட்டுள்ள கட்டுநாயக்கவில் அமைந்துள்ளதும் "தவட்டகஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஜே. எம். ஜீ. டயஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு 05.09.1985 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல.700ஏ/85 இல் குறிப்பிடப்பட்ட பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து செய்யப்பட்ட காணியின்

எல்லைகளாவன – வடக்கு: எச். டி. பிரான்சிஸ் அப்புஹாமியின் காணி: கிழக்கு: டபிள்யூ. எம். ஆர். வின்சன்ட் மற்றும் ஜியோர்ஜி அனா ரொட்ரிகோவின் காணி: தெற்கு: எச்.டி. மெட்ரில்டா மற்றும் டி. சேனாநாயக்கவின் காணிகள் அத்துடன் யூ. ஹெரியெட் இன் காணி: மேற்கு : யூ. ஹெரியெட் இன் காணி மற்றும் வீதி. இது, 0.1207ஹெக்டயார் அல்லது ஒரு றூட் நான்கு பேர்ச்சுக்கள் (0ஏ. 1றூ. 4பே.) விஸ்தீரணமுடையது. நீர்கொழும்பு காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஈ 979/43 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கூறப்பட்டுள்ள கட்டுநாயக்கவில் அமைந்துள்ளதும் “தவட்டகஹவத்தை கொட்டஸ” என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. டி. என். பீரிஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1996.01.25 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 726 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 1 என அடையாளமிடப்படுள்ள பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன – வடக்கு: சரத் மாவத்தை; கிழக்கு: ஜீ.ஏ. தனபால கருணாரத்னவின் காணி; தெற்கு: ஜீ. ஏ. தனபால கருணாரத்னவின் காணி; மேற்கு : டி. சேநாயக்கவின் காணி. இது, 0.0094 ஹெக்டயார் அல்லது மூன்று தசம் ஏழு ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 3.75பே.) விஸ்தீரணமுடையது. நீர்கொழும்பு காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் எச் 70/26 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

ராஜித கருணாதிலக்க,
உதவி முகாமையாளர்.

8-151

---

## பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(பஞ்சிகாவத்தை கிளை)
வாடிக்கையாளரின் பெயர்: பிரிண்ட்லைன் கம்பியூட்டர் சிஸ்ரம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

29.06.2016 ஆந் திகதிய தீர்மானத்தினால், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் பணிப்பாளர் சபை பின்வருமாறு விசேடமாகவும் தீர்மானித்தது:-

“கடப்படுடையவரன பிரிண்ட்லைன் கம்பியூட்டர் சிஸ்ரம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் ஈடுவைத்தவரான ஏராவின் நவரட்ணம் ஆகியோர் பதிவு இல. பீகியு 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ. எஸ். என். ராஜகருணா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2014, மார்ச்சு, 28 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 5258 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்களாதலாலும்;

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. (இதனகத்துப்பின்னர் சிலவேளைகளில் ‘‘வங்கி’’ என அழைக்கப்படும்) இற்கு சொல்லப்பட்ட முறி இல. 5258 இன் மூலம் 05.05.2016 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதிவரை ஒரு கோடியே ஆறு இலட்சத்து முப்பதாயிரத்து முப்பது ரூபா அறுபத்தேழு சதம் (ரூ. 1,06,30,030.67) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு இருபத்து நான்கு வீத (24%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது ஒரு கோடியே ஆறு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து தொளாயிரத்து எட்டு ரூபா முப்பத்தொன்பது சதம் (ரூ. 1,06,57,908.39) கொண்ட தொகை மற்றும் 04.05.2016 ஆந் திகதிவரையான வட்டியும் தற்போது வர வேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும்;

சொல்லப்பட்ட முறி இல. 5258 இன் மீது வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை ஒரு கோடியே ஆறு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து தொளாயிரத்து எட்டு முப்பத்தொன்பது சதம் (ரூ. 1,06,57,908.39) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதிகளிலிருந்து விற்பனை திகதிவரை வட்டியுடனும் சேர்த்து அறவிடுதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள‘ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், கண்டி மாவில்மடை, துட்டுகெமுனு மாவத்தை, இல. 369/1 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யு. ஐயசூரிய அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.”

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், (கம்பஹா பதிவுப் பிரிவிற்குள்), அளுத்குறு கோறளை, றாகம் பற்று, வத்தளை பிரதேச சபை எல்லைகளுக்குள் (ஹெந்தளை உப அலுவலக எல்லைகளுக்குள்), வத்தளை பிரதேச செயலாளர் பிரிவு, 172- ஹெந்தளை தெற்கு கிராம அலுவலர் பிரிவு, ஹெந்தளை, அல்விஸ் டவுனில் அமைந்துள்ளதும் ஓடை கரை ஒழுங்கை, வரிமதிப்பு இல. 170/66 ஐக்கொண்டதும் “நெதுன்கஹகும்புற” என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. பிரசாத் விமலசேன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2004, திசெம்பர், 20 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 4953/ஏ இல் குறிப்பிடப்பட்டு துண்டு 51 (உத்தரவுபெற்ற நில அளவையாளர் டி. பிரசாத் விமலசேன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2004, மார்ச்சு, 28 திகதியிடப்பட்ட வரைபடம் இல. 4953 இல் குறிப்பிடப்பட்டு

துண்டுகள் 1 மற்றும் 2 என அடையாளமிடப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட காணிகளின் உப பிரிவாகவிருக்கின்ற) என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 51 இன் எல்லைகளாவன – வடக்கு : இதன் துண்டுகள் 52 மற்றும் 50; கிழக்கு: இதே வரைபடத்தின் துண்டு 50, வரைபடம் இல. 1487 இல் துண்டு 2 மற்றும் இதே வரைபடத்தின் துண்டு 66 ; தெற்கு : வரைபட இல. 4953ஏ இல் துண்டு ஆர்8; மேற்கு: இதன் துண்டுகள் ஆர்8 மற்றும் 52. இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 4953ஏ இற்கமைய சைபர் ஏக்கர் சைபர் றூட் எட்டு பேர்ச்சு (0ஏ. 0றூ. 8.0பே.) அல்லது 0.02023 ஹெக்டயார் விஸ்தீணமுடையது. கம்பஹா காணிப் பதிவகத்தில் தொகுதி/ தலைப்பு எல் 73/04 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பின்வரும் வீதி ஒதுக்கின் வழியேயும் கீழும் மேலுமான வழியுரிமை மற்றும் ஏனைய எல்லா தொடர்புபட்ட உரிமைகளுடனும் சேர்த்து:-

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் (கம்பஹா பதிவுப் பிரிவிற்குள்), அளுத்குறு கோறளை, றாகம் பற்று, வத்தளை பிரதேச சபை எல்லைகளுக்குள் (ஹெந்தளை உப அலுவலக எல்லைளுக்குள்), வத்தளை பிரதேச செயலாளர் பிரிவு, 172- ஹெந்தளை தெற்கு கிராம அலுவலர் பிரிவு,ஹெந்தளை, அல்விஸ் டவுனில் அமைந்துள்ளதும் ''நெதுன் கஹகும்புற'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுமெபற்ற நிலஅளவையௗர் டி. பிரசாத் விமலசேன அவர்களால் தயாரிக்கப் பட்டு 20 திசெம்பர், 2004 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 4953/ஏ இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஆர்8 (9 மீற்றர் அகல வீதிக்கான ஒதுக்கு) (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. பிரசாத் விமலசேன அவர்களால் தயாரிக்கப்பட்டு 28 மார்ச்சு, 2004 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 4953 இல் குறிப்பிடப்பட்டு துண்டுகள் 1 மற்றும் 2 என அடையாளமிடப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட காணிகளின் உப பிரிவாகவிருக்கின்ற) என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு ஆர்8 இன் எல்லைகளாவன – வடக்கு: இதே வரைபடத்தின் துண்டுகள் ஆர் 7, 52, 51, 66, 67, 68, 71 மற்றும் 72; கிழக்கு: இதே வரைபடத்தின் துண்டுகள் 52, 51, 66, 67, 68, 71, 72 மற்றும் வீதி; தெற்கு: இதே வரைபடத்தின் வீதி, துண்டுகள் 73, 70, 69, 65, 64, 63; மேற்கு: இதே வரைபடத்தின் துண்டுகள் 73, 70, 69, 65, 64, 63, 62 மற்றும் ஆர்5. இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 4953/ஏ இற்கமைய சைபர் ஏக்கர் சைபர் றூட் முப்பத்து மூன்று தசம் ஒன்று சைபர் பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 33.10பே.) அல்லது 0.04022 ஹெக்டயார் விஸ்தீரணமுடையது; கம்பஹா காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் எல் 73/05 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

தேவிகா ஹல்வத்துர,
முகாமையாளர்–அறவீடுகள்.

8–138

---

**மக்கள் வங்கி – குளியாபிடிய – 028**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D ஆம் பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 2015.05.28 ஆந் திகதி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் ஏகமன தாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்:-

“திரு. ஏ. எம். ஜயன்த அபேசிங்ஹ மற்றும் திருமதி. ஏ. எம். சமன்தா அபேசிங்ஹ என்பவர்களால் மக்கள் வங்கியின் சார்பில் குருநாகல் பிரசித்த நொத்தாரிசு திருமதி. நிலீகா ஹர்ஷனி வீரகோன் அவர்களால் 2013.05.30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2957, 2961 மற்றும் 2959 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால், இப்பொழுது சொல்லப்பட்ட ஈட்டு முறியின் மீது எழுபத்தி இரண்டு இலட்சம் ரூபா (ரூ. 72,00,000), எழுபது இலட்சம் ரூபா (ரூ. 70,00,000), முப்பது இலட்சம் ரூபா (ரூ. 30,00,000), தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் இப்பொழுது சொல்லப்பட்ட எழுபத்தி இரண்டு இலட்சம் ரூபா (ரூ. 72,00,000), எழுபது இலட்சம் ரூபா (ரூ. 70,00,000) மற்றும் முப்பது இலட்சம் ரூபா (ரூ. 30,00,000), மீது முறையே 2015.01.15, 2013.06.04 மற்றும் 2014.10.31 ஆந் திகதி முதல் ஏலவிற்பனை திகதி வரை ஆண்டொன்றுக்கு முறையே இருபத்தி இரண்டு (22%) சதவிகிதப்படி, இருபத்தி இரண்டு (22%) சதவிகிதப்படி, இருபத்தி மூன்று தசம் ஐந்து (23.5%) சதவிகிதப்படி வட்டியும் ஏல விற்பனை திகதிவரை தொடர்ந்தும் வட்டியையும், குறிப்பிட்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D ஆம் பிரிவின் கீழ் அறவிடப் படவேண்டிய பணம், செலவுகள் உட்பட, அதன் பின்னர் கொடுப்பனவுகள் ஏதும் பெறப்பட் டிருப்பின் அவற்றைக் கழித்து முறையே எழுபத்தி இரண்டு இலட்சம் ரூபா (ரூ. 72,00,000), எழுபது இலட்சம் ரூபா (ரூ. 70,00,000) மற்றும் முப்பது இலட்சம் ரூபா (ரூ. 30,00,000) ஒரே முறையில் அறவிடுவதற்காக சொல்லப்பட்ட 2957, 2961 மற்றும் 2959 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மீது சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட ஆதனமும் வளவும் உத்தரவு பெற்ற ஏலதாரர் சொக்மன் அன் சமரவிக்ரம கம்பனியினால் பகிரங்க ஏல விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D ஆம் பிரிவின் கீழ் அதற்குறித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.”

**ஈடுவைக்கப்பட்ட ஆதனம் பற்றிய விபரம்.**

1. வட மேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பல ஹத்பத்துவ, கட்டுகம்பல வடக்குக் கோரலை, குளியாபிடிய (மேற்கு) பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட, பஹல வீரம்புவ கிராம

அலுவலர் பிரிவு, வீரம்புவ என்ற கிராமத்தில் அமைந்துள்ள ''மாரகஹமுலவத்தை மேற்கு இரண்டில் ஒரு பங்கு'' என்ற காணிக்கு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு. எஸ். எம். திஸாநாயக்க அவர்களால் 2004.01.03 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 3945 ஆம் இலக்க வரைபடத்தின் 01 ஆம் இலக்க காணித்துண்டுக்கான எல்லைகள் - வடக்கு : ரத்னஹாமி மற்றும் வேறும் நபர்கள் உரிமை கோரியதாகக் கூறப்படும், தற்போது டீ. பி. குனரத்ன பண்டா, உரிமைகோரும் காணியும், 03 ஆம் இலக்க பாதையும்; கிழக்கு : 02 ஆம் மற்றும் 03 ஆம் இலக்க பாதைகள்; தெற்கு : 02 ஆம் இலக்க காணி ; மேற்கு : புஞ்சி பண்டா உரிமை கோரியதாகக் கூறப்படும், தற்போது கே. டபிள்யூ. சீலவதி உரிமைகோரும் தொரகடவெல வயற் காணி என்ற எல்லைகளுக்குட்பட்ட இரண்டு ஏக்கர், மூன்று றூட், முப்பது பேர்ச் (2ஏ. 3றூ. 30பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்களாக. (B22/107 - குளியாபிடிய)

2. வட மேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பல ஹத்பத்துவ, கட்டுகம்பல வடக்குக் கோரலை, குளியாபிடிய மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உற்பட்ட, பஹல வீரம்புவ கிராம அலுவலர் பிரிவு, வீரம்புவ என்ற கிராமத்தில் அமைந்துள்ள ''மாரகஹ முலவத்தை மேற்கு இரண்டில் ஒரு பங்கு'' என்ற காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. எஸ். எம். திஸாநாயக்க அவர்களால் 2004.01.03 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 3945 ஆம் இலக்க வரைபடத்தின் 02 ஆம் இலக்க காணித்துண்டுக்கான எல்லைகள் - வடக்கு : 01 ஆம் மற்றும் 03 ஆம் இலக்க பாதைகள்; கிழக்கு : புஞ்சி பண்டா உரிமை கோரியதாகக் கூறப்படும், தற்போது என். ஜே. பியசேன உரிமைகோரும் காணி ; தெற்கு : ஹெந்திரிக் வெதரால உரிமைகோரிய வயற் காணி தற்போது மிடியகுரா உரிமை கோரும் பிள்ளேவ ; ஹெந்திரிக் வெதரால உரிமைகோரிய தற்போது டி. பி. குனரத்பண்டா வேறும் நபர்கள் உரிமை கோரும் வயற் காணி ; மேற்கு : புஞ்சி பண்டா உரிமை கோரியதாகக் கூறப்படும், தற்போது ரண்பண்டா மற்றும் வேறும் நபர்கள் உரிமை கோரும் தொரகடவெல வயற் காணி என்ற எல்லைகளுக்குற்பட்ட ஒரு ஏக்கர், இரண்டு றூட் (1ஏ. 2றூ. 0பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்களாக. (B22/108 - குளியாபிடிய)

3. வட மேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பல ஹத்பத்துவ, கட்டுகம்பல வடக்குக் கோரலை, குளியாபிடிய மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உற்பட்ட, இஹல வீரம்புவ கிராம அலுவலர் பிரிவு, வீரம்புவ என்ற கிராமத்தில் அமைந்துள்ள ''கஹட்ட கஹமுலவத்தை'' என்ற காணிக்கு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு. ஜே. ஏ. எஸ். ஜயலத் அவர்களால் 2009.08.02 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 329 ஆம் இலக்க வரைபடத்தின் 01 ஆம் இலக்க காணித்துண்டுக்கான எல்லைகள் - வடக்கு : 63 ஆம் இலக்க வரைபடத்தின் 04 ஆம் இலக்க தற்போது எச். எம். காமினி பந்துல ஹேரத் மற்றும் எச். எம். அஜித் பந்துல ஹேரத் உரிமை கோரும் காணி ; கிழக்கு : 63 ஆம் இலக்க வரைபடத்தின் 04 ஆம் இலக்க காணி ; தெற்கு : 63 ஆம் இலக்க வரைபடத்தின் 07 ஆம் இலக்க தற்போது எச். எம் விஜேசேன உரிமை கோரும் காணி ; மேற்கு : தப்போமுல்லையிலிருந்து பிரதான பாதைக்குச் செல்லும் பிரதேச சபைப் பாதை என்ற எல்லைகளுக்குற்பட்ட ஒரு ஏக்கர், எட்டு தசம் ஆறு பூச்சியம் பேர்ச் (1ஏ. 0றூ. 8.60பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்களாக. (B 20/126 - குளியாபிடிய)

பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 03, வத்ஹிமி பாதை,
குருநாகல்.

8-111

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2016***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒகத்து** | .. | வெள்ளி | 05.08.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.07.2016 |
| | | வெள்ளி | 12.08.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.07.2016 |
| | | வெள்ளி | 19.08.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.08.2016 |
| | | வெள்ளி | 26.08.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.08.2016 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 02.09.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.08.2016 |
| | | வெள்ளி | 09.09.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.08.2016 |
| | | வியாழன் | 15.09.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.09.2016 |
| | | வெள்ளி | 23.09.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.09.2016 |
| | | வெள்ளி | 30.09.2016 | .. | நண்பகல் 12 | வியாழன் | 15.09.2016 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 07.10.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.09.2016 |
| | | வெள்ளி | 14.10.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.09.2016 |
| | | வெள்ளி | 21.10.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.10.2016 |
| | | வெள்ளி | 28.10.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.10.2016 |

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*